- **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

**6.** மேலைத்தேய யதார்த்தவாத ஓவியப்பாணியின் செல்வாக்கிற்கமைய நவீன விகாரை ஓவியங்களை வரைந்த முன்னோடி ஓவியக் கலைஞர் யார்?

..............................................................................................................................

**7.** A. மார்க் என்ற கலைஞரால் கழிவுப் பொருட்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட சிலை என்ன பெயரால் அழைக்கப்படும்?

..............................................................................................................................

**8.** பெண்களின் உருவங்களைப் பயன்படுத்தி குடமொன்றின் வடிவில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மரபுரீதியான அலங்கார ஆக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

..............................................................................................................................

**9.** 'புஞ்சி சிங்ஞோ' என்ற கேலிச்சித்திர பாத்திரத்தை உருவாக்கிய கலைஞர் யார்?

..............................................................................................................................

**10.** சிறிய தலையையும் எளிய அரூப வடிவங்களையும் பயன்படுத்தி சிலைகளை நிர்மாணித்த ஐரோப்பிய சிற்பக் கலைஞர் யார்?

..............................................................................................................................

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன்கீழ் கோடிடுக.

**11.** 'பிரஸ்கோ சிகோ' என்பது,
(1) ஈரச் சாந்தின் மீது வரைதலாகும். (2) சுண்ணாம்பு சேர்க்கப்பட்ட சாந்தின் மீது வரைதலாகும்.
(3) காய்ந்த சாந்தின் மீது வரைதலாகும். (4) சாந்தின் மீது சுண்ணாம்பைப் பூசி வரைதலாகும்.

**12.** பித்தளைப் பாண்டங்களின் நிர்மாணிப்பின்போது விசேடமான பொது விடயமாக அமைவது,
(1) வார்ப்பதன் மூலம் பாண்டங்களைத் தயாரித்தல்
(2) தகடுச் செதுக்கல், தட்டுதல் மூலம் பாண்டங்களைத் தயாரித்தல்
(3) அமிழ்த்துவதன் மூலம் பாண்டங்களை அலங்கரித்தல்
(4) மினுக்குவதன் மூலம் பளிச்சிடும் தன்மையானதாகப் பூரணப்படுத்துதல்

**13.** சிந்துவெளிச் சிற்பங்களில் யதார்த்த தன்மையையன்றி கலைப்பாங்கான தன்மையை எடுத்துக்காட்டும் சிலை
(1) பூசகர் உருவம் (2) நடனமாதின் உருவம்
(3) முண்டத்தின் உருவம் (4) நடனத் தோற்றத்தைக் காட்டும் முண்டத்தின் உருவம்

**14.** எகிப்திய கலைப்படைப்புகளில் கிடைக்கப்பெறும் 'ஸ்பிங்ஸ்' உருவம்,
(1) எகிப்தியர்கள் வழிபட்ட சக்திவாய்ந்த கடவுளொருவரின் சிலையாகும்.
(2) பாரா அரசனொருவனைச் சித்திரிக்கும் பிரமாண்டமானதொரு சிலையாகும்.
(3) சுண்ணக்கற் துண்டுகளைப் பயன்படுத்திக் கட்டியெழுப்பப்பட்ட சிலையாகும்.
(4) பாரா அரசர்களின் வீர பராக்கிரமங்களைச் சித்திரிக்கும் கற்பனைச் சிலையாகும்.

**15.** இலங்கையில் ஆதிவாசிகளின் குகை ஓவியங்களில்,
(1) மனிதர்களினதும் பிராணிகளினதும் உருவங்கள் குறியீட்டடிப்படையில் வரையப்பட்டுள்ளன.
(2) பிராணிகளின் உண்மையான அசைவுத் தோற்ற நிலைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
(3) அழகிய வர்ணங்களினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
(4) பிராணிகளைச் சித்திரிப்பதில் மாத்திரம் வரையறை பேணப்பட்டுள்ளது.

- **16** தொடக்கம் **20** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.

**16.** பர்ஜன்ய : ..............................................................................................

**17.** பாயம் பேஹீம : ..............................................................................................

**18.** பக்கத் தோற்றப் பார்வை : ..............................................................................................

**19.** சிரஸ்பத்த : ..............................................................................................


**20.** குறுக்குச் சட்டம் / கிடையான கற்பாளம் : ..............................................................................................

- **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களுக்கு **F, G, H, I, J** ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.


F


G


H


I


J

**31.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிவபெருமானின் துணைவியான 'சிவகாமசுந்தரி' சிலையானது .................................................... என்ற பெயரிலேயே மிகப் பிரபல்யமடைந்துள்ளது.

**32.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை பொலன்னறுவையில்........................................ பிரதேசத்தில் காணத்தக்கதாயுள்ளது.

**33.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள .................................................... சிலையானது பீடியஸ்சினால் நிர்மாணிக்கப்பட்ட மிகப்பெரிய சிலையாகும்.

**34.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'பெயரிடப்படாதது' எனப் பெயரிடப்பட்டுள்ள சிலையானது பேராற்றல் மிக்கவோர் இலங்கைக் கலைஞரான .................................... இன் நிர்மாணிப்பாகும்.

**35.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'காவற்கல்' எண்ணக்கரு பற்றிய பக்குவமான நிலையை எடுத்தியம்பும், அனுராதபுரக் காலத்திற்குரியதான இது .................................................... இற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது.

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை இனங்கண்டு, அதன் கலைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் **36** தொடக்கம் **40** வரை தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக **பொருளுள்ள ஐந்து வாக்கியங்கள்** எழுதுக.

**36.** இடமும் தொனிப்பொருளும் : ..............................................................................................

..............................................................................................

**37.** கலைஞர் : ..............................................................................................

..............................................................................................

**38.** ஒழுங்கமைப்பு : ..............................................................................................

..............................................................................................

**39.** செல்வாக்கு : ..............................................................................................

..............................................................................................

**40.** உணர்வு வெளிப்பாடு : ..............................................................................................

..............................................................................................

## விடைகள் - பகுதி I

1. கடலதெனியா
2. கம்பளை
3. விஜயோத்பாய
4. கணேஸ்வராச்சாரியார்
5. சிலை மனை / பிலிமகே / புத்தமனை / பிரதிமாகார
6. எம். சார்ளிஸ்
7. மனிதனும் நாயும்
8. பஞ்சநாரிகடய / பஞ்சநாரி கலசம்
9. W. R. விஜயசோம
10. கென்றி மூவர் / ஹென்றி மூர்
11. - 3
12. - 4
13. - 1
14. - 4
15. - 1
16. நீரின் அதிபதி / நீரின் தெய்வம்

    ஈசுருமுனி விகாரையில் காணப்படும் மனித வடிவம்

    பரணவிதானவின் கருத்துக்கள்
17. முகமூடிக் கைத்தொழிலில் மரத்தின் வைரமான பகுதியை வெட்டித் தட்டையாக்குதல்.
18. கண்டிக்கால, எகிப்திய ஓவியங்கள் இந்த பாணியில் வரையப்பட்டுள்ள பக்கத் தோற்றப்பாடுகள்

    உதாரணம் : தெகல்தொறுவா விகாரை ஓவியங்கள்

    வெள்ளை யானையைப் பரிசளித்தல் / எகிப்திய பறவை வேட்டை ஓவியம்
19. புத்தர் தலையில் காணப்படும் உச்சிக்குடும்பி

    உதாரணம் : அவுக்கண புத்தர் சிலை

    கண்டிக்கால புத்தர் சிலையின் தலையில் விசேடமாக அமைக்கப்பட்ட அமைப்பு ஆகும். அதாவது புத்தரின் உடலில் இருந்து வெளிப்பட்ட ஒளியைக் குறிக்கின்றது. இதனை பஞ்ச வர்ண ஒளிப்பிளம்பு எனலாம். இது ஐந்து வர்ணங்களை எடுத்துக் காட்டுகின்றது. நீலம், சிவப்பு, வெள்ளை, செம்மஞ்சள், மஞ்சள்
20. சாஞ்சி தோரணத்தில் கிடையாக அமைக்கப்பட்டுள்ள கற்பாளம், இதில் 3 சட்டங்கள் காணப்படுகின்றன.
21. - C
22. - D
23. - E
24. - B
25. - A
26. அப்சரா தேவகன்னிகள்
27. கதளுவ விகாரை
28. எதென்ஸ் பாடசாலை / எதென்ஸ் குருகுலம்

